Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C. 153/2022** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW**20 |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | பாலாஜி |
| Father Name | : | பன்னீர் செல்வம் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.10.2024

(எதிரி 1 ஆஜர், எதிரிகள் 2, 3 ஆஜர் இல்லை. 2, 3–ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.)

**முதன்மை விசாரணை:–**

நான் இராமநாதபுரம் குமரையா கோவில் தெருவில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன பனையடியான் என்னுடைய மாமா. ஆஜர் எதிரியை தெரியாது. இந்த வழக்கின் மற்ற எதிரிகள் நவநீதகிருஷ்ணன் என்கிற கஜேந்திரன், முத்துமுருகன் என்கிற செந்தில் ஆகியோரை தெரியுமா என்றால் தெரியாது. இறந்துபோன பனையடியான் இறப்பதற்கு

முன் இராமநாதபுரம் வழிவிடுமுருகன் கோவில் அருகில் உள்ள வேன் ஸ்டாண்டில் இருந்து டாடா ஏசி வண்டி ஓட்டி வந்தார். சுமார் 1 வருடத்திற்கு முன்பு ஒருநாள் நான் பரமக்குடியில் இருந்து இராமநாதபுரத்திற்கு வந்து கொண்டிருந்தபோது என்னுடைய மாமாவுக்கு சண்டையில் அடிபட்டுவிட்டது என்றும், அவரை இராமநாதபுரம் GH–க்கு அவரை சிகிச்சைக்கு கொண்டு சென்று சேர்த்திருப்பதாக தகவல் சொன்னார்கள். நான் இராமநாதபுரம் GH–க்கு போய் என் மாமாவை பார்த்தேன். என் மாமாவுக்கு எங்கு காயம் இருந்தது என்று நான் பார்க்கவில்லை. நான் போய் பார்த்தபோது என் மாமா இறந்துவிட்டதாக சொன்னார்கள். பிரச்சனையில் என் மாமாவை அடித்துவிட்டதாக சொன்னார்கள். யார் அடித்தார்கள் என்று சொல்லவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u> –

இவ்வழக்கு சம்மந்தமாக இராமநாதபுரம் கேணிக்கரை காவல் நிலைய பொறுப்பு வகித்த பஜார் காவல் நிலைய காவல் ஆய்வாளர் 05.03.2021 அன்று விசாரித்தபோது 05.03.2021 அன்று மாலை 05.00 மணியளவில் எனது மாமா பனையடியான் டாடா ஏசி ஸ்டாண்டில் இருந்தபோது இராமநாதபுரம் மஞ்சனமாரியம்மன் கோவில் தெருவை சேர்ந்த 1–ஆம் எதிரி அழகுமலை என்ற அண்ணாமலை மற்றும் அவருடைய கூட்டாளிகளான 2, 3 எதிரிகள் சேர்ந்து தகராறு செய்து என் மாமா ஓட்டிய வண்டிக் கண்ணாடியை உடைக்கப்போவதாக பேசிக்கொண்டிருந்ததை பழனி என்பவர் கேட்டுவிட்டு எனது உறவினர் ரவி என்பவருக்கு தகவல் சொன்னார் என்றும், அப்போது ரவியும், ஒர்க்சாப்பில் இருந்த நானும், ரவி மற்றும் அங்கிருந்த பனையடியான் மகன் கபிலன் ஆகிய மூன்று பேரும் அந்த இடத்திற்கு சென்றோம் என்றும், அப்போது 1, 2 எதிரிகள் கையில் அருவாலுடனும், 3–ஆம் எதிரி கையில் சவுக்குக்கட்டையுடன் இருந்ததை பார்த்தவுடன் நாங்கள் பயந்து கொண்டு ஒதுங்கி நின்றுவிட்டோம் என்றும், அப்போது 1–ஆம் எதிரி என் மாமா பனையடியானை பார்த்து ஏன்டா தேவுடியா மவனே இப்போ என்னடா செய்வ என்று சொல்லி கையால் பிடித்து தள்ளிவிட்டார்என்றும், அப்போது கூட இருந்த 2–ஆவது எதிரி அவர்கையில் வைத்திருந்த அருவாளால் ஓங்கி

என் மாமா பனையடியானின் தலையில் இடது பக்கமும், வலதுகால் முட்டிக்கு கீழ் பின்பக்கமும், இடதுகால் தொடையில் பின்பக்கமும், இடுப்புக்கு பின்னாலும், வலதுபக்க முதுகிலும் மாறிமாறி வெட்டினார் என்றும், அப்போது 3–ஆவது எதிரி அவர் கையில் வைத்திருந்த சவுக்குக் கட்டையால் பனையடியானின் தலை, உடம்பு, கால் ஆகிய இடங்களில் மாறிமாறி அடித்து பலத்த இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்றும், அப்போது 3–ஆவது எதிரி சவுக்குக்கட்டையால் அடிக்கும்போது தவறி 1–ஆவது எதிரியின் தலையின்பக்கம் பட்டு 1–ஆவது எதிரிக்கும் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், அப்போது அங்கிருந்த வண்டிக்காரத்தெரு ராஜேஸ் என்பவர் விலக்கிவிட்டார் என்றும், அப்போது 2 ஆவது எதிரி கையில் வைத்திருந்த அருவாளால் பனையடியானை வெட்டும்போது தவறுதலாக ராஜேசின் வலதுஉள்ளங்கையில் பட்டு லேசான கீறல்காயம் ஏற்பட்டது என்றும், அப்போது எதிரிகள் எங்களை பார்த்தவுடன் கிட்ட வந்தால் உங்களையும் போட்டுத்தள்ளிடுவோம் என்று மிரட்டிவிட்டு எதிரிகள் மூன்று பேரும் வண்டிக்காரத் தெரு வழியாக ஓடிவிட்டார்கள் என்றும், இரத்தக்காயம் ஏற்பட்டிருந்த பனையடியானை ஆட்டோவில் ஏற்றி இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டுபோய் சேர்த்தோம் என்றும், சிகிச்சையில் இருந்த பனையடியான் கொஞ்சநேரத்தில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்றும், நான் அரசு மருத்துவமனையில் இருந்தபோது போலிசார் அங்கு வந்து விசாரித்தார்கள் என்றும் ஆய்வாளர் விசாரித்தபோது சொன்னேன் என்றும், தற்போது எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றும் நோக்கத்தில் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> – இல்லை.**